





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.9.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் 396 சிறந்த ஆசிரியர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுகளை வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர், பிரியா, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி.சந்தரமோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## சமூக மாற்றங்களைக் கல்வியால் மட்டுமே சாத்தியப்படுத்த முடியும்:

# சக்திவாய்ந்த கல்வியை மாணவர்களிடம் சேர்க்கின்ற ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு புரட்சியாளர்தான்!

## சென்னையில் நல்லாசிரியர் விருதுகளை வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, செப்.7-**

**சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், ஆசிரியர் தின விழாவை யொட்டி, டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழா மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு நல்லாசிரியர் விருதுகளை ஆசிரியர்களுக்கு வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:-

அமைச்சர் நண்பர் அன்பில் மகேஷ் அவர்கள், சென்ற வருடமும் இதே ஆசிரியர் தின நிகழ்ச்சிக்கு என்னை அழைத்திருந்தார். பல்வேறு கோரிக்கைகளை நீங்கள் வைத்திருந்தீர்கள். அதில், பல கோரிக்கைகளை நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி கொடுத்திருக்கிறார். சில கோரிக்கைகளை நீங்களே மறந்திருந்தாலும், நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கக்கூடியவர், அந்தக் கோரிக்கைகளை எல்லாம் உங்களுக்கு நினைவுபடுத்தியிருக்கிறார். நிச்சயமாக, உங்களின் கோரிக்கைகள் அத்தனையையும் நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றிக் காட்டுவார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பணிகளைச் சிறப்பாக செய்வார் என்ற உறுதிமொழியை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### நல்லாசிரியர் விருது!

பொதுவாக, வகுப்பில் இருக்கும்போது ஓரிரண்டு ஆசிரியர்களைப் பார்க்கும் போது, கண்டிப்பான ஆசிரியர்களைப் பார்க்கும்போது கொஞ்சம் பயமும், பதற்றமும் வந்துவிடும். ஆனால், இன்றைக்கு ஒரே அரங்கத்தில் கிட்டத்தட்ட 400 ஆசிரியர்களை ஒன்றாகப் பார்க்கிற வாய்ப்பு, எனக்கு கிடைத்திருக்கிறது. அதனால் பயத்துடன் கொஞ்சம் பதற்றமும் சேர்ந்து கொண்டு இருக்கின்றது. அதுவும், நீங்கள் எல்லோரும் சாதாரண ஆசிரியர்கள் கிடையாது. நல்லாசிரியர் விருது பெறுகின்ற ஆசிரியர்கள். ஆசிரியர்களுக்கெல்லாம் சிறந்த ஆசிரியர்கள் நீங்கள். எனவே, உங்கள் முன்பு பேசும்போது மிகவும் அளந்து, கவனமாகப் பேச வேண்டிய சூழ்நிலையில் நான் இருக்கிறேன். இல்லையென்றால், எனக்கு நீங்கள் மார்க் போட மாட்டீர்கள், ஃபெயில் ஆக்கிவிடுவீர்கள். இன்னும் கோபம் வந்ததென்றால், எனக்கு இம்போசிஷன் கொடுத்து விடுவீர்கள். எனவே, உங்கள் அத்தனை பேருக்கும் முதலில் என்னுடைய ஆசிரியர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பெரியார் - அண்ணா - கலைஞர்!

நம்முடைய திராவிட இயக்கத்துக்கும், ஆசிரியர்களுக்கும் எப்பொழுதுமே மிக நெருங்கிய தொடர்பு உண்டு. தந்தை பெரியார் அவர்களே மிகப்பெரிய ஒரு ஆசிரியர். அவர் பகுத்தறிவுக்கு ஆசிரியர், சுயமரியாதைக்கு ஆசிரியர், மூட நம்பிக்கைக்கு எதிரான ஆசிரியர். அப்படிப்பட்ட ஆசிரியருக்குதான், நேற்று லண்டனில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெரியாருடைய திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, தந்தை பெரியார் அவர்கள், தமிழ்நாட்டுக்கு மட்டும் இல்லை, இந்தியாவுக்கு மட்டும் சொந்தம் இல்லை, இந்த உலகத்திற்கே பெரியார் சொந்தம் என்பதை நிரூபித்துக் காட்டி இருக்கிறார்.

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள், அவர் பள்ளி ஆசிரியராக முதலில் பணியை தொடங்கிய பிறகுதான் மக்கள் பணிக்கு வந்தார். அதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். அதேமாதிரி நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாணவராக இருக்கும்பொழுதே ஆசிரியரானார். மாணவராக இருக்கும் போதே `மாணவநேசன்' என்ற பத்திரிகையைத் தொடங்கி, சாதாரண பத்திரிகை அல்ல, கையெழுத்துப் பிரதியைத் தொடங்கி, அதற்கு ஆசிரியராக இருந்தவர்தான் கலைஞர் அவர்கள். அதன்பிறகு, அவர் எப்பொழுதுமே பெருமையாகச் சொல்லுவார், என்னுடைய மூத்த பிள்ளை `முரசொலி' என்று. முரசொலியை ஆரம்பித்து, தன்னுடைய வாழ்நாள் முழுவதும் அதற்கு ஆசிரியராக இருந்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### தலைவர்களின் வழியில்...

எங்களுடைய தாய்க்கழகத்தின் தலைவர், திராவிடர் கழகத்தின் தலைவர் ஐயா கி.வீரமணி அவர்களை இன்றைக்கும் நாங்கள் எங்களுடைய ஆசிரியர் ஐயா என்றுதான் அழைப்போம். இந்தத் தலைவர்களின் வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 'திராவிட மாடல்' என்கிற மிகப் பெரிய தத்துவத்தின் மிகச்சிறந்த ஆசிரியராக செயலாற்றிக் கொண்டிருக்கின்றார். அதனால்தான் உங்களின் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் எப்பொழுது பேசும்போதும் சொல்வார். முதலமைச்சர்தான் எங்களுக்கு தலைமையாசிரியர். நாங்கள் எல்லாம் அவருக்கு மாணவர்கள் என்று பெருமையாகச் சொல்லுவார். அந்த அளவுக்கு திராவிட இயக்கமாக இருந்தாலும் சரி, கழக அரசாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களை எப்பொழுதுமே மதித்தது, போற்றியது.

### சமூக நீதியைக் கற்றுக்கொடுங்கள்!

முன்பெல்லாம் கிராமங்களுக்குச் சென்றோம் என்றால், ஒரு வீட்டைக் காட்டி இதுதான் `வாத்தியார் வீடு' என்று பெருமையாகச் சொல்வார்கள். மற்ற வீடுகளுக்கு எல்லாம் அப்படி தனியான அடையாளம் கிடையாது. ஆனால், இன்றைக்கு ஒரு கிராமத்துக்குச் சென்றீர்கள் என்றால், அங்கு காட்டுவார்கள், இது டாக்டர் வீடு, இது இன்ஜினியர் வீடு, இது வக்கீல் வீடு என்று சொல்கிற அளவுக்கு இன்றைக்கு கிராமங்களுக்கு கல்வி போய் சேர்ந்துவிட்டது. இத்தனை வீடுகளுக்கு, கல்வி சென்று சேர்வதற்கான காரணம் முதன்முதலாக அந்த கிராமத்துக்கு வந்த அந்த வாத்தியார் வீடுதான். ஏனென்றால், ஆசிரியர்களாகிய நீங்கள்



தான் அந்த ஊருக்கான மருத்துவரை உருவாக்கி இருக்கிறீர்கள், பொறியாளர்களை உருவாக்கி இருக்கிறீர்கள், வழக்கறிஞர்களை உருவாக்கி இருக்கிறீர்கள். ஏன் இன்னும் சொல்ல வேண்டுமென்றால் என்னை மாதிரி அரசியல்வாதிகளையும் நீங்கள்தான் உருவாக்கி இருக்கிறீர்கள். சமூக மாற்றங்களை கல்வியால் மட்டுமே சாத்தியப்படுத்த முடியும் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட சக்திவாய்ந்த கல்வியை மாணவர்களுக்கு கொண்டுபோய் சேர்க்கின்ற நீங்கள், இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு ஆசிரியர்களும் ஒரு புரட்சியாளர் என்றுச் சொன்னால் அது மிகையாகாது. ஆகவே, தமிழ்நாட்டு மாணவர்களின் அறிவியல் மனப்பான்மையை நீங்கள் வளர்த்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். அதற்கு நீங்கள் அவர்களை வழிநடத்த வேண்டும், அறிவுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எதையுமே ஏன்? எதற்கு? எப்படி? என கேள்வி கேட்க நீங்கள் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ஒரு அறிவார்ந்த சமூகத்தை, அறிவார்ந்த ஆசிரியரால்தான் உருவாக்க முடியும். அப்படிப்பட்ட உங்களின் பணி, மேன்மேலும் சிறக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

### எந்நாளும் ஏற்க முடியாது!

இன்றைய காலகட்டத்தில் சமூக அநீதிக்கு எதிரான மனப்பான்மையை, மாணவர்களுக்கு நீங்கள் ஏற்படுத்த வேண்டும். சமூக நீதியை நீங்கள் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும், அறிவுறுத்த வேண்டும். அநீதியை எதிர்க்க வேண்டும் என்ற உறுதியோடுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், புதிய கல்விக் கொள்கைக்கு மாற்றாக, தமிழ்நாடு கல்விக் கொள்கையை வெளியிட்டார்கள். தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையை எந்நாளும் ஏற்க முடியாது, எங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எங்களுக்கு இருக்கும் இருமொழிக் கொள்கையே போதும் என்றுச் சொன்னவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

### விளையாட்டு நேரம்!

இன்றைக்கு உங்களின் பங்களிப்பால்தான் தமிழ்நாடு அரசு கல்விக்காக செயல்படுத்துகின்ற பல்வேறு திட்டங்களில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது.

உதாரணத்திற்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், இப்படி எத்தனையோ திட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். இந்த எல்லா திட்டங்களின் வெற்றிக்குப் பின்பும், உங்களின் உழைப்பு, அதிக அளவில் இருக்கிறது.

பள்ளிக் கல்வியை நீங்கள் சரியாக சொல்லிக் கொடுப்பதினால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் 75 சதவிகித மாணவர்கள் உயர்கல்விப் படிக்கச் செல்கிறார்கள். இந்த 75 சதவிகிதத்தை விரைவில் 100 சதவிகிதமாக மாற்றிக்காட்ட வேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கிறது.

அதை நிச்சயம் செய்வீர்கள் என்ற நம்பிக்கை முதலமைச்சருக்கும் இருக்கிறது, எனக்கும் இருக்கிறது. உங்களின் வளர்ச்சிக்கு நம்முடைய கழக அரசு எப்பொழுதும்போல துணை நிற்கும் என்பதை இங்கே உறுதியோடு கூறிக் கொள்கிறேன்.

நீங்களும் கடந்த காலங்களில் எப்படி நம்முடைய அரசுக்கு ஆதரவு தந்தீர்களோ, அதே ஆதரவை இன்னும் அதிகமாக ஆதரவு கொடுக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில், ஒரேயொரு வேண்டுகோள். பொதுவாக, இதை நான் மாணவர்கள் மத்தியில்தான் பேசுவேன். இங்கு விளையாட்டுத் துறை அமைச்சராக உங்களிடத்தில் ஒரு வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். நிறைய ஆசிரியர் பெருமக்கள் வந்திருக்கிறீர்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், கணிதம், அறிவியல் ஆசிரியர்கள் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். தயவு செய்து விளையாட்டு வகுப்பைக் கடன் வாங்கி கணிதம், அறிவியல் பாடத்தை நடத்தாதீர்கள்.

நம் மாணவர்களை விளையாட்டு நேரத்தில், தயவுசெய்து விளையாட விடுங்கள்.

இன்றைக்கு உங்களின் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், அவர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்தாலும், இங்கு சொன்னதுபோல அவர் விரைவில் முனைவர் பட்டம் பெறப் போகிறார். அதற்காக ஆய்வு மேற்கொண்டிருக்கிறார்.

என்னதான் அவர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருந்தாலும், நான்கு ஆண்டுகளாக அவர் செய்யும் ஆராய்ச்சியைத்தான் ஒவ்வொரு பள்ளிக்கல்வித்துறை நிகழ்ச்சியிலும் கூறிக்கொண்டிருக்கிறேன்.

என்ன தலைப்பு தேர்வு செய்துள்ளார் தெரியுமா? `பிசிகல் ஆக்டிவிட்டீஸ் பார் ஸ்கில் டெவலப்மென்ட் அமங் தி சில்ட்ரன், யூசிங் மெஷின் லேர்னிங்'. என்னதான் அவர் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்தாலும், அவர் முனைவர் பட்டம் பெறப்போவதற்கு, விளையாட்டுத் துறைதான் முக்கிய காரணம். அந்த உரிமையுடன் ஆசிரியர்களுக்கு இந்த வேண்டுகோளை நான் வைக்கிறேன்.

மாணவர்கள் நன்றாக விளையாடட்டும். ஏனென்றால், மாணவர்களின் உடல் ஆரோக்கியமாக இருந்தால் தான், உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும். அப்போதுதான் அந்தக் கல்வி அவர்களிடம் சென்று சேரும்.

இந்த நேரத்தில் இன்னொரு சிறப்பான அறிவிப்பு. இந்த மகிழ்ச்சியான, சிறப்புக்குரிய நாளில் ஒரு முக்கியமான செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

### திருவுருவச் சிலை

ஆசிரியராக இருந்து, ஜனாதிபதியாக உயர்ந்த திரு.டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு நம்முடைய முதல மைச்சரின் உத்தரவின்படி, திருவள்ளூர் மாவட்டத்தில் திருவுருவச்சிலை அமைக்கின்ற பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

இது ஆசிரியர் பெருமக்கள் உங்களுக்கான பெருமை. அந்த சிலையை வடிவமைக்கின்ற பணி விரைவில் நடைபெற்று, அந்த சிலையை நம்முடைய முதலமைச்சர் அவர்களே திறந்து வைக்க இருக்கின்றார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர் பணி என்ற இந்த அறப்பணியில் நீங்கள் சிறப்பாகச் செயல்பட்டு 'நல்லாசிரியர் விருது' பெறுகின்ற அத்தனை ஆசிரியர் பெருமக்களுக்கும், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு முழுக்க ஆசிரியர்களாக பணியைத் தொடங்கவிருக்கும் அத்தனை ஆசிரியர் பெருமக்களுக்கும், என்னுடைய வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், அரசு முதன்மைச் செயலாளர் சந்திரமோகன் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் கண்ணப்பன், தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் முத்துக்குமார், மாதிரி பள்ளிகளின் உறுப்பினர் செயலர் சுதன், தனியார் பள்ளிகளின் இயக்குநர் முனைவர். குப்புசாமி, ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் செயலர் வி.சி. ராமேஸ்வர முருகன், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றச் சங்க மாநிலத் தலைவர் தியாகராஜன், சேகர், ராஜா தமிழ்மாறன், தொடக்கக் கல்வியின் இயக்குநர் நரேஷ், பிற்படுத்தப்பட்டோர் நல வாரியத் துணைத் தலைவர் ராஜா அருள்மொழி உள்பட பலரும் கலந்து கொண்டனர்.